2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தன்னுடைய உரையை நிறைவு செய்யும்போது, இரண்டு கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார். ஆதி திராவிட மக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களை "பட்டியல் இன மக்கள்" என்று அழைக்க வேண்டும் என்பது குறித்து ஒன்று. இரண்டாவதாக, சென்னையிலே உள்ள பொது மருத்துவமனைக்கு மறைந்த இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை.

முதல் கோரிக்கை, ஆதி திராவிட மக்களை "ஆதி திராவிடர்கள்" என்று அழைப்பதா அல்லது வேறு பெயரில் அழைப்பதா? எல்லாவற்றையும் விட்டுவிட்டு புதுப் பெயரில் அழைப்பதா என்றெல்லாம் ஒரு பிரச்சினை, கேள்வி எழுந்தபோது, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய முடிவுக்கு இது விடப்பட்டிருக்கின்றது.

நான் இந்தப் பெயர் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆதி திராவிடர்களா? பஞ்சமர்களா? பறையர்களா? பள்ளர்களா? என்றெல்லாம் பகுத்துச் சொல்கின்ற நிலைக்கு முன்பு, தந்தை பெரியார் அவர்களிடத்திலே கேட்டார்கள் – "நீங்கள் ஆதி திராவிடர்களுக்காக உழைப்பதாகச் சொல்கிறீர்களே; நீங்கள் கேட்கிற திராவிட நாடு வந்தால், எங்கள் நிலை என்ன?" என்று கேட்டபோது, பெரியார் சொன்னார் "ஆதி" என்ற அந்தப் பெயரை நீங்கள் இழக்க நேரிடும்; "நீங்களும் திராவிடர்களாக ஆகி விடுவீர்கள்" என்று பெரியார் சொன்னார். இப்பொழுதுள்ள சூழ்நிலையில், அந்தப் பதிலைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஏனென்றால், நான் பெரியார் அல்ல. பெரியார் எதையும் ஆய்ந்து சொல்வார்கள் –துணிந்து சொல்வார்கள். ஆகவேதான், நான் அதைச் சொல்ல விரும்பவில்லை.

முற்பகல் 11–45

இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினை, "பட்டியல் இனத்தவர்" என்று அழைப்பதா; அல்லது ஆங்காங்குள்ள அந்த வகுப்பினரைக் குறித்து, அதையும் சொல்லிவிட்டு, "பட்டியல் இனத்தவர் "என்று

அழைப்பதா என்ற ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. நான் சில நண்பர்களோடு கலந்து பேசியதில், முடிவாக அறிவிக்கலாம் என்று கருதுவது, இனி ஆதி திராவிடர்கள் என்றோ, தலித் என்றோ அழைக்காமல், "பட்டியல் இனத்து மக்கள்" என்று அழைத்துவிட்டு, அவர்களுடைய வகுப்பை, அவர்கள் ஆதி திராவிடரா அல்லது அருந்ததியரா என்பதையெல்லாம் அடைப்புக் குறிக்குள்ளே போட்டுவிட்டு — அதாவது "பிராக்கெட்"—இல் போட்டுவிட்டு, அவர்களைப் "பட்டியல் இன மக்கள்" என அழைக்கலாம் என்ற ஒரு கருத்தை நாங்கள் ஏற்கெனவே அமைத்திருக்கின்ற குழுவிடத்திலே கருத்து பரிமாறிக்கொண்டிருக்கிறோம். அந்தக் குழுவினுடைய அறிக்கை விரைவிலே வரும். அது, அந்த மக்களுடைய மனம் மகிழத்தக்க அளவிலே, அந்த முடிவு இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொன்று சொன்னார்; ராஜிவ் காந்தி அவர்களுடைய — குண்டடிப்பட்ட உடல் வைக்கப்பட்டிருந்த சென்னை மருத்துவமனைக்கு அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று சொன்னார். நிச்சயமாக அந்தப் பெயர் வைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இலட்சக்கணக்கான காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் சார்பாகவும், எங்கள் அருமை அன்னை, தியாகத் திருவிளக்கு அன்னை சோனியா காந்தி அவர்களின் சார்பாகவும், இந்த அவையிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். *(குறுக்கீடு)*

திரு. டி. ஜெயக்குமார்: சார், செல்வி. பாலபாரதிக்கு ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசுகிற நேரத்தை உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் கழித்து விடுவேன். *(குறுக்கீடு)*